විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව

ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය | தலைமுறையொன்றின் பெருமிதம் | Pride of a Generation

මගේ අංකය
எனது இல. } ஓதி/நி06/2017
My No.

ඔබේ අංකය
உமது இல. } ......................
Your No.

දිනය
திகதி } 21 .07.2017
Date

அனைத்து மாவட்டச் செயலாளர்கள்,

அனைத்துப் பிரதெச செயலாளர்கள்,

ஊடாக,

அனைத்து ஓய்வூதிய அலுவலர்களுக்கு, அபிவிருத்தி உதவியாளர்களுக்கு மற்றும் ஆவண உதவியாளர்களுக்கு.

**ஓய்வூதியக் கொடுப்பனவுத் தகவல்களை தரவுத்தளத்தில்ப் புதுப்பித்தல்.**

ஓய்வூதியத் திணைக்களம் ஏறத்தாள 589,000 ஓய்வூதியர்களுக்கு மாதாந்த ஓய்வூதியத்தை வழங்கியுள்ளது. நவீன தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது இயங்கலைத் தொகுதிப் பயன்பாட்டாளர்களிற்கு வசதிளை வழங்கும் பொருட்டு இத்தொகுதி நிறுவப்பட்டுள்ளது. அதற்கமைவாக, பிரதேச செயலகங்களில் இத் தரவுத்தளத்தைப் பயன்படுத்தி தகவல்கள் பராமரிக்கப்படுதல் வேண்டும். ஆனால் , சரியான முறையில் தகவல்கள் தரவேற்றம் செய்யப்படுவதில்லை. ஓய்வூதியர்களின் தேவையையும், மேன்மையான முகாமைத் துவத்தையும் கருத்திற் கொண்டு இத்தொகுதியைச் சீராகப் பராமரித்தல் அவசியமானதாகிறது. அதற்காகச் சரியாகத் தகவல்களைப் பராமரிப்பதுடன் பிரதெச செயலகங்களில் கிடைக்கப்பெறும் தகவல்களை தரவுத்தளத்தில் தரவேற்றம் செய்தலும் அவசியமாகும்.

02. ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு தொடர்புடைய ஓய்வூதியர்களது தரவு தளத்தில் மேம்படுத்தாமை காரணமாக மோசடி சம்பவங்கள், மேலதிக கொடுப்பனவுகள் , குறைந்த கொடுப்பனவுகள் ஆகியவற்றால் துல்லியமான தகவல்களைப் பெற முடியாமையானது கொள்கை முடிவுகளை எடுத்தல் மற்றும் அந்நிகழுவுகளை பாராளுமன்றப் பொதுக் கணக்குக் குழுவுக்கு அறிக்கையிடுதல் போன்றவற்றில் விளைவுகளை ஏற்படுத்தும். அத்தகைய அலுவலர்களுக்கு எதிராக அரச கணக்காய்வுக் தொடர்புடைய அனைத்துக் குழுக்களாலும் வழங்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கும் செயற்பாடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

03. அடையாளம் காணப்பட்ட சிக்கலானதான முறைசாராக் காரணிகள் மற்றும் பிரதேச செயலகளில் உள்ள தரவுத்தளத்தைக் கண்காணிக்கும் போது புதுப்பிக்கப்பட வேண்டிய காரணிகள் பின்வருமாறு :

මාළිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.
Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk

03. அ) தரவுத்தளத்துடன் தொடர்புடைய பிரச்சனைகள் :

i. திருத்தமான தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பதிவேற்றம் செய்யாமை.
தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் தரவுத்தளத்தில் பதிவேற்றம் செய்வது அவசியமானது. அவ்வாறு பதிவெற்றம் செய்யும் போது எவையேனும் பிரச்சனைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் தரவுத்தளத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றல் வேண்டும் ( Select the reason). அதற்கமைவாக, (இனங்காணப்பட்ட காரணத்திற்கு). ஓய்வூதியரின் பிறந்த மாதம் திகதி ஆண்டு ஆகியவற்றை உட்புகுத்திப் பதிவேற்றல் கட்டாயமானதாகும்.

ii. சரியான ஓய்வூதிய வகையைக் (Type) குறிப்பிடல்.
தவறான ஓய்வூதிய வகையை திருத்தம் செய்தல் வேண்டும் அதன்பொருட்டு ஓய்வூதிய மூலக் கோவையை ஆய்வு செய்வதுடன் கோவையிலுள்ள கொடைப் பத்திரத்தில் காணப்படுவது போன்று ஓய்வூதிய வகையைக் குறிப்பிடல் வேண்டும்.

iii. பெயர் மற்றும் பிறந்த மாதம் திகதியை திருத்தம் செய்தல்.
ஏற்கனவே உள்ள செயல்முறையைக் கையாள்வதன் மூலம் பெயர் மற்றும் பிறந்த மாதம் திகதியை திருத்தம் செய்வது அவசியமானதாகும்.

iv. ஓய்வுபெற்ற திகதி, மாதம் மற்றும் ஆண்டு ஆகியவற்றைத் திருத்தம் செய்தல்.
ஏற்கனவே தரவுத்தளத் தொகுதியில் ஓய்வு பெற்ற திகதி, மாதம் மற்றும் ஆண்டு ஆகியவற்றைத் திருத்தம் செய்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன, அதற்கமைய திருத்தம் மேற்கொள்ள வேண்டும். ஓய்வூதிய திகதி, மாதம் மற்றும் ஆண்டு மாற்ற வேண்டியிருப்பின் கொடைப் பத்திரத்தை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

v. கிராம சேவகர் பிரிவு மட்டத்திற்கமைவாக இறந்த ஓய்வூதியர்களது விபரத்தைத் தரவுத் தளத் தொகுதியில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

vi. சரியான கால இடைவேளையில் தரவுத்தளத் தொகுதியைப் புதுப்பித்தல் வெண்டும்.
உ-ம் : 1) புதிய ஓய்வூதியக் கொவைகள் பெறப்படும் போது.
2) வருடாந்த உயிர்வாழ்ச் சான்றிதழ் பெறுதல்.

vii. தங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் தங்கி வாழ்வோர் படி மற்றும் விதவைகள் படி. ஆகியவற்றிற்கான புதுப்பித்தல் செயல்படுகள் 15 ஆம் திகதி அக்டோபர் மாதம் 2017 இற்கு முன்பே நிறைவுறுத்தல் வேண்டும்.

viii. தரவுத் தளத்தில் தரப்பட்ட வசதிகளிற்கேற்ப அபராதப் பதிவேடு மாதாந்தம் புதுப்பிக்கப்படல் வேண்டும். அதற்கமைய மாத்தாந்தம் குறைப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு தலைமைச் செயலகத்திற்கு அனுப்பப்படவேண்டும் (Deduction report).

**03. ஆ) ஓய்வூதியக் கொடுப்பனவுப் பிரிவில் எழும் பிரச்சினைகள்.**

i. பல்வேறு ஓய்வூதியங்களை பெற்ற முப்படை ஓய்வூதியர்கள், விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியர்கள், ஆகியோரது ஓய்வூதியத் கோவைகளை ஓய்வூதியக் கொடுப்பனவின் பொருட்டு இணைத்தல்.

ii. உயிர்வாழ்ச் சான்றிதழ் பெறுவதற்கமைவாக ஓய்வூதியக் கோவையைப் புதுப்பித்தல்.

iii. ஓய்வூதியக் கோவையற்ற ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகளை நிறுத்துதல் மற்றும் அனுமதியுடன் தற்காலிக் கோவையை தயாரித்தல்.

iv. அனாதைகள் வயதெல்லையைக் கடந்த பின்னரும் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களை இனங்கண்டு அவர்களது ஓய்வூதியத்தை நிறுத்துதல்.

v. ஊனமுற்ற ஓய்வூதியரை சரியான காலத்தில் மருத்தவ சபைக்குத் தோற்ற வழிகாட்டல்.

vi. சரியானயான காலப்பகுதியில் வயதுக்கு கீழ் உள்ளவர்களது கணக்குகளை வெளியிடுதல்.

vii. ஓதி/நி06/(06/2006) அம் இலக்க 2016/01/07 மற்றும் 2016/05/18 ஆம் திகதிய ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதங்களிற்கமைவாக ஓய்வூதியத் கோப்புகளை ஆய்வு செய்கையில் காணப்படும் முரண்பாடுகளை சரிசெய்தலும் முடிவுறுத்தலும்.

viii. வெளிநாட்டு ஓய்வூதியம் பெறுவோர் பதிவேட்டைப் பராமரித்தல்.

ix. 13/92(v) ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்று நிருபத்திற்மைவாக மேலதிகக் கொடுப்பனவுப் பதிவேட்டுப் புத்தகத்தைப் பராமரித்தல் .

x. வாழ்க்கைச் செலவுப்படிக்கான மேலதிக கொடுப்பனவுளை இனங்காணல், நிறுத்துதல் மற்றும் மீட்டெடுத்தல். (புதிதாக இனங்காணப்பட்டவை தொடர்பில் மாதாந்த அறிக்கை எனக்கு சமர்ப்பிக்கப்படல் வெண்டும்).

xi. மரணமடைந்த ஓய்வூதியர்கள் தொடர்பில் (நிறுத்தப்பட்ட வி.அ.த ஓய்வூதியம், அனாதைகள் படி மற்றும் தங்கி வாழ்வோர் படி ஆகியவை) எனக்கு பூரணமான அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (இணைப்பு 2).

xii. இடைநிறுத்தப்பட்ட ஓய்வூதியத்தை மீண்டும் வழங்கல்.
இடைநிறுத்தப்பட்ட ஓய்வூதியத்தை மீண்டும் வழங்குகையில் அவ்வாறு கொடுப்பனவு மேற்கொள்ளும் காரணத்தை மூலப் பதிவேட்டில் குறிப்பு (Note) எனக் குறிப்பிட்டுள்ள பகுதியில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வெண்டும். அவ்வாறு குறிப்பிடாத பட்சத்தில் அது நிராகரிக்கப்படும்.

04. ஓய்வூதியத் திணைக்களத்தின் கீழ்ப் பிதேச செயலகங்களின் ஓய்வூதியக் கிளையில் இணைக்கப்பட்டுக் கடமையாற்றும் அனைத்து அலுவலர்களும் **2017.12.31 ஆம் திகதிக்கு முன்பாக** இப்புதுப்பித்தலை மேற்கொள்ளல் வேண்டும். தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பிரதேச

செயலாளர் மற்றும் கணக்காளர் ஆகியோரிடமிருந்து தேவையான உதவிகளைப் பெறுவது தங்களது கடமையாகும்.

05. பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் ஓய்வூதியம் தொடர்புடைய அலுவலர்களுக்கு தேவைப்படும் உதவிகளை வழங்குவது, அவர்களைக் கண்காணிப்பது மற்றும் மாதாந்த முன்னேற்ற அறிக்கையைத் தலைமைச் செயலகத்திற்குச் சமர்ப்பிப்பது ஆகியவை மாவட்ட ஓய்வூதிய அலுவலரின் பொறுப்பாகும். (இணைப்பு 1)

06. எதிர்காலத்தில் சம்பள உயர்வு மற்றும் செயல்திறன் மதிப்பீடு ஆகியவற்றிற்கான ஒப்புதல் மேற்கூறிய பந்தி 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளை ஒழுங்குபடுத்துவதைக் கருத்திற் கொண்டே வழங்கப்படும்.

**ஒப்பம்.**
**ஏ. ஜகத். டி டயஸ்.**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள் :

1. செயலாளர் – பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு – த.த.த
2. செயலாளர் – உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு – த.த.த

இணைப்பு 01

## ஓ.தி/ நிர்வாகம் 06/2007 - மாதாந்த முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல்

மாவட்டம்: .......................... பிரதேச செயலகம்: .............................. மாதம் 2017 ..............

அலுவலர் பெயர் : ............................................. ............................................. .............................................

பதவி: ............................................. ............................................. .............................................

இணைந்த திகதி : ........................... ........................... ...........................

ஓய்வூதியர்களின் எண்ணிக்கை: ................ (விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியர்கள் அடங்கலாக)

| | விபரம் | முற்றுப் பெற வெண்டிய வேலை (சென்ற மாதம்) | இம்மாதத்தினுள் முற்றுப் பெற்ற வேலை | முற்றுப் பெற வேண்டிய அளவு |
|---|---|---|---|---|
| 01 | தேசிய அடையாள அட்டை இலக்கத்தில் திருத்தம் ( NIC No) | | | |
| 02 | சரியான ஓய்வூதிய குறுயீடு மற்றும் வகையைத் (Type) திருத்தம்செய்தல். | | | |
| 03 | பெயர் மற்றும் பிறந்த மாதம் திகதியை உறுதிப்படுத்தல். | | | |
| 04 | ஓய்வுபெற்ற திகதியில் திருத்தம் செய்தல் | | | |
| 05 | இறப்பைப் பதிவேற்றம் செய்தல். | | | |
| 06 | i. புதிய ஓய்வூதியரது கொடைப்பத்திரத்தை தரவுத்தளத்தில் பதிவேற்றம் செய்தல் | | | |
| | ii. அடுத்து வரும் 3 மாதங்களில் கோவைகள் கிடைக்கப் பெறாவிடின் ஓய்வூதியம் நிறுத்தப்படல்வேண்டும். | | | |
| | iii. உயிர்வாழ்ச் சான்றிதழைப் கிடைக்கப் பெறாவிடின் ஓய்வூதியம் நிறுத்தப்படல்வேண்டும். | | | |
| 07 | அனாதைகள் ,தங்கி வாழ்வோர் மற்றும் பாதுகாவலர்கள் ஆகிய தொடர்பில் தரப்பட்ட தகவல்களைப் புதுப்பித்தல். | | | |
| 08 | மேலதிகக் கொடுப்பனவுக்கொவைகளைப் புதுப்பித்தல் (பிரதேச செயலகத்திற்கு பொருத்தமானது) | | | |
| 09 | இணைக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை (கோவைகள்தொடர்பான தகவல்கள் இணைக்கப்பட வேண்டும்) | | | |
| 10 | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்காக வழங்கப்பட்ட தற்காலிக கோவைகளின் எண்ணிக்கை (தகவலை இணைக்க வேண்டும்) | | | |
| 11 | மருத்துவ சபையின் அனுமதிக்காக வழங்கப்பட்ட கொவைகளின் எண்ணிக்கை (பிரதேச செயலகத்தில் ஒரு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்) | | | |
| 12 | முரண்பாடுகள் திருத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | | | |
| 13 | மேலதிக கொடுப்பனவு இனங்காணப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | | | |
| 14 | வெளிநாட்டு ஓய்வூதியர்களின் எண்ணிக்கை 1. தற்காலிக:<br>2. நிரந்தர: | | | |
| 15 | தற்காலிகமாக ஓய்வூதியம் நிறுத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை. (காரணத்தை வெளிப்படுத்தும் ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்) | | | |

மேற் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்

தயாரித்தவர் : திரு/திருமதிசெல்வி......................................

........................................ ........................................

மாவட்ட ஓய்வூதிய அலுவலர் பிரதேச் செயலாளர்

இணைப்பு 02

## 2017 ஆண்டு …………… மாதத்திற்கு

**…………………………………. பிரதேச செயலாளர் பிரிவில் - இறந்த ஓய்வூதியர்களுக்கான அறிக்கை**

| தொ.இல | ஓய்வூதிய இலக்கம் | தே.அ.அ. இலக்கம் | பெயர் | ஓய்வுபெற்ற திகதி | ஓய்வூதியர் இறந்த திகதி | விதவைகள்/அனாதைகள்/ ஊனமுற்றோர் ஓய்வூதியம் நிறுத்தப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

மேற் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்

தயாரித்தவர் : திரு/திருமதிசெல்வி………………………………

………………………………… …………………………………

மாவட்ட ஓய்வூதிய அலுவலர் பிரதேச் செயலாளர்